**2020 ம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரன கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :**
**திரு. சி. பாண்டு,**
**நகராட்சி பொறியாளர் மற்றும்**
**தனி அதிகாரி(பொ),**
**விருத்தாசலம் நகராட்சி.**

**பொருள் எண். 1.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 33 சாவடிக்குப்பத்தில் உள்ள நவீன எரிவாயு தகன மேடைக்கு 01.04.2020 முதல் 21.03.2022 வரை Water Act and Air Act கட்டணமாக ரூ. 12,200/– செலுத்தக் கோரி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், கடலூர் அவர்களின் கடிதம் எண். Fcud0447/DEE/TNPCB/cud/2020, நாள். 10.06.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ. 12,200/– வங்கி வரைவோலையாக DEE, TNPCB, Cuddalore அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசரம் அவசியம் கருதி தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 2.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13 காட்டுக்கூடலூர் ரோடு மற்றும் திருவள்ளுவர் நகர் 6,7,8,9 தெருக்களில் குடிநீர் சரிவார வரவில்லை என பொதுமக்கள் புகார் தெரிவித்ததன் அடிப்படையில் அப்பகுதியில் புதியதாக 3” PVC பைப்லைன் 6” CI வால்வு மற்றும் 3” வால்வு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 30,000/–க்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 3.**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. **9.95** இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். **16**, வடக்கு பெரியார் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் புதிய போர்வெல் அமைக்கும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு(**15**)ன் கீழ் **23.04.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி. கே. சாந்தி | மதிப்பீட்டைவிட 0.05 சதவிகிதம் குறைவு. |
| 2. | திரு. கே. சிவகுருநாதன் | மதிப்பீட்டைவிட 0.40 சதவிகிதம் அதிகம். |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண். **1**ல் காணும் திருமதி. கே. சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை குடிநீர் பணியின் அவசரம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு (**15**) ன் கீழ் ஏற்று பணி உத்தரவு வழநூகி பணி நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ. **9,11,624/–** (பிடித்தம் போக) வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 4.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் கீழ்காணும் டாட்டா ஏஸி வாகனங்கள் கழிவு மணல் ஏற்றும் போது பெட்டி தாழ்வாக உள்ளது. இதனால் வாகனத்தின் அடிப்பகுதியில் இரண்டு பட்டை சேர்ந்து வாகனத்தினை சரிசெய்து தருமாறும் மேலும் நான்கு வாகனத்தின் நான்கு வீல் பகுதிகளில் கிரிஸ் பேக்கிங் செய்து தருமாறு ஓட்டுனர் கோரியுள்ளதை தொடர்ந்து பொது சுகாதார நலன் கருதி கீழ் காணும் நான்கு வாகனங்களுக்கு ஓட்டுனர் குறிப்பிட்டுள்ள பணிகளை செய்திட மேற்கொள்ள வேண்டிய தோராய செலவினம் ரூ. **70000/–** (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வாகனத்தின் விவரம் |
|---|---|
| 1. | TN-91-S- 0605 டாடா ஏஸ் |
| 2. | TN-91-S- 0624 டாடா ஏஸ் |
| 3. | TN-91-S- 0664 டாடா ஏஸ் |
| 4. | TN-91-S- 0687 டாடா ஏஸ் |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2073/2020/எச்1)**

**பொருள் எண். 5.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் JCB வாகனம் TN-31-AZ-4145 யை வருடத்திற்கு ஒரு முறை முழு சர்வீஸ் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சியில் 33 வார்டுகளுக்கு ஒரே JCB மட்டுமே உள்ளது. அதனை தொடர்ந்து தற்சமயம் வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டு முழு வீச்சில் பணிகளுக்கு பயன்படுத்த இயக்கும் தன்மை கடினமாக உள்ளதால், வாகனத்தினை சரிசெய்திட சம்மந்தப்பட்ட கம்பெனியின் “DYNATECH” நிறுவனத்தில் நேரடியாக விலைப்பட்டியல் பெற்று ஓராண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 2,20,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2024/2020/எச்1)

**பொருள் எண். 6.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN-31-AZ- 3057 டிப்பர் லாரி வாகனத்திற்கு முன்பக்க டயர்கள் வெடித்து இரண்டு டயர்களும் மோசமான நிலையில் உள்ளது எனவும் இதனால் வாகனத்தை ஓட்டுவதற்கும் பொது சுகாதாரப்பணிகள் செய்வதிதில் சிரமமாக உள்ளது எனவும் ஓட்டுனர் குறிப்பிட்டுள்ளார். அதனை தொடர்ந்து துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு அலுவலர் அவர்களின் 09.06.2020ம் நாளிட்ட குறிப்பின் அடிப்படையில் மற்றும் பொது சுகாதாரம் பணிகளின் அவசரம் அவசியம் குறித்து மேற்கெண்டுள்ள வாகனத்திற்கு முன்பக்க டயர்கள் இரண்டு செட்டாக வாங்குவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ. 28,000/– (ரூபாய் இருபத்து எட்டாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2074/2020/எச்1)

**பொருள் எண். 7.**

விருத்தாசலம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை காரணமாக நன்னீர் தேங்கி அதில் டெங்கு கொசுக்கள் உற்பத்தியாகி காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே நகரின் அனைத்து பகுதிகளிலும் காய்ச்சல் வராதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர கோட்டம் I,II,III ல் வார்டு வாரியாக வீட்டின் உள்ளே எடுத்து சென்று கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்திட வேண்டிய அவசியம் உள்ளது. அவ்வாறு கொசு புகை மருந்து அடிக்கும் (Indoor Fogging Machine) க்கு தேவையான Gas Cylinder காலியாக விட்டதால் 100 வாங்கி வழங்குமாறு துப்புரவு அலுவலர் அவர்கள் குறிப்பு அளித்துள்ளார். மேற்படி துப்புரவு அலுவலர் அவர்களின் குறிப்பினை ஏற்று பொது சுகாதார நலன் கருதியும் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் எதிர் வரும் மழைக்காலங்களில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 100 சிலிண்டர்கள்

வாங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 35,000/– (ரூபாய் முப்பத்து ஐந்தாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பொருள் குறித்த செலவினத் தொகையினை 2020–2021 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2329/2020/எச்1)

**பொருள் எண். 8.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 9,95,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 19,23,24 மற்றும் 32ல் தெருவிளக்குகளில் உள்ள சோடியம் ஆவி விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3801,நாள்.28.02.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 10.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | ராசி அண் கோ,<br>50எப்,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | (-) 0.03 % குறைவு |
| 2. | இந்தியா ஹார்டுவேர்ஸ்,<br>50/எப்–1,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | (+) 1.14 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் ராசி அண் கோ, 50எப்,ஜங்ஷன் ரோடு,விருத்தாசலம். நிறுவனம் அளித்துள்ள 0.03% குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

**பொருள் எண். 9.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 1,31,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 16ல் காமராஜர் தெருவில் மழைநீர் வடிகால் உயர்த்தி அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3865,நாள்.05.06.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 25.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் | (-) 0.09 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 0.46 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள **0.09** % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

**பொருள் எண். 10.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. **4,72,000/–** மதிப்பீட்டில் வார்டு எண் **16**ல் வடக்கு பெரியார் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் புதிய சுற்றுசுவர் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.**3866**,நாள்.**05.06.2020**ல் அனுமதியளித்தற்கிணங்க **25.06.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் | (-) 1.18 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 1.33 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள **1.18** % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

**பொருள் எண். 11.**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. **3,60,000/–** மதிப்பீட்டில் விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட **33** வார்டுகளிலும் கோடை காலத்தை முன்னிட்டு **90** நாட்களுக்கு குடிநீர் வழங்க குடிநீர் டேங்கர் லாரி வாடகைக்கு அனுப்பும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி **08.04.2020** அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை(ரூ) |
|---|---|---|
| 1. | ஸ்ரீ வெங்கடாஜலபதி எர்த் மூவர்ஸ் & லாரி சர்வீஸ்,மேலக்கோட்டை வீதி , விருத்தாசலம். | **4000/–** **(ஒரு நாள் வாடகை)** |
| 2. | K.S.R & Sons, காமராஜர் நகர், விருத்தாசலம். | **4250/–** **(ஒரு நாள் வாடகை)** |
| 3. | ஸ்ரீ தாய் MPS & Sons, சேலம் ரோடு,விருத்தாசலம். | **4400/–** **(ஒரு நாள் வாடகை)** |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் ஸ்ரீ வெங்கடாஜலபதி எர்த் மூவர்ஸ் & லாரி சர்வீஸ்,மேலக்கோட்டை வீதி ,விருத்தாசலம் நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1324 /2020/இ2)

**பொருள் எண். 12.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 9,95,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 28 மணலூர் இரயில்வே மேம்பாலத்தில் உள்ள சோடியம் ஆவி விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3804,நாள்.28.02.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 10.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | ராசி அண் கோ, 50எப்,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | (-) 0.03 % குறைவு |
| 2. | இந்தியா ஹார்டுவேர்ஸ், 50/எப்–1,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | (+) 1.14 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் ராசி அண் கோ, 50எப்,ஜங்ஷன் ரோடு,விருத்தாசலம். நிறுவனம் அளித்துள்ள 0.03 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

**பொருள் எண். 13.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 எம்.ஆர்.கே நகர் ஆறுமுகம் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வரும் நிலையில் அப்பகுதி மக்கள் சிமெண்ட் சாலையுடன் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிறுபாலம் அமைத்து தர வேண்டும் என நேரில் கோரிக்கைவிடுத்ததற்கிணங்க , அப்பகுதி பொதுமக்களின் நலன்கருதி மேற்படி பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 14.**

விருத்தாசலம் நகராட்சியின் 33 வார்டுகளிலும் கோட்டம் 1,2,3 ல் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு பணி செய்ய தேவையான தளவாட பொருட்கள் 2020–2021 ஆண்டுகளுக்கு வாங்கி வழங்குமாறு பட்டியலுடன் துப்புரவு மேற்பார்வையாளர்களால் தெரிவிக்கப்பட்டு, அதனை துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு அலுவலர் அவர்களின் 19.06.2020ம் நாளிட்ட குறிப்பினை ஏற்று பொது சுகாதாரப்பிரிவின் மூன்று கோட்டத்திற்கு பயன்படுத்தப்படும் தளவாட பொருட்கள் வாங்குவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ. 4,00,000/– (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இப்பொருள் குறித்த செலவினத் தொகையினை 2020–2021 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து

மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 15.**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 1,15,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 6 கல்லூரி நகர் வடக்கு பகுதியில் 3" பி.வி.சி பைப்லைன் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3657,நாள்.31.12.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 17.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.வி.ரமேஷ், ஒப்பந்ததாரா் | (-) 0.14 % குறைவு |
| 2. | ராசி அண் கோ , ஒப்பந்ததாரா் | (+) 1.20 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.வி.ரமேஷ், ஒப்பந்ததாரா் அவா்கள் அளித்துள்ள 0.14 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 5978 /2020/இ2)

**பொருள் எண். 16.**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 6,00,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 16 வடக்கு பெரியார் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் புதிய போர்வெல் அமைக்கும் பணி (பகுதி–2) க்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3852,நாள்.29.05.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 18.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரா் | (-) 0.07 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரா் | (+) 1.54 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரா் அவா்கள் அளித்துள்ள 0.07 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 5978 /2020/இ2)

**பொருள் எண். 17.**

விருத்தாசலம் நகராட்சி சார்பாக மூன்றாண்டு சாதனை விளம்பரம் மாலை மலர் நாளிதழில் வெளியிட்டதற்கான தொகை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனத்திற்கு கீழ்கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தினசரி நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | மாலை மலர் | 9815/– |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண். 1976/2020/இ1)

**பொருள் எண். 18.**

விருத்தாசலம் நகராட்சியின் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 16 வடக்கு பெரியார் நகர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் அமைக்கப்படும் புதிய போர்வெல்லுக்கு 30 எச்.பி. மோட்டார், 40 எச்.பி மோட்டார் 3" கருப்பு பி.வி.சி பைப் GI பைப் சப்ளை செய்யும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் 23.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விதிகம் |
|---|---|---|
| 1. | திருமதி. கே. சாந்தி | மதிப்பீட்டை விட 0.05 சதவிகிதம் குறைவு |
| 2. | திரு. கே. சிவகுருநாதன் | மதிப்பீட்டை விட 1.02 சதவிகிதம் அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் காணும் திருமதி. கே. சாந்தி ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைவிட குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியை குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)ன்கீழ் ஏற்று பணி உத்தரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 19.**

விருத்தாசலம் நகராட்சியில் கொரோனா வைரஸ் (COVID-19) பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, மாவட்ட ஆட்சியர் கடலூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு மற்றும் சார் ஆட்சியர், விருத்தாசலம் ஆகியோர் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியதற்கிணங்க, பொதுமக்களின் நலன் கருதி கொரோனா வைரஸ் (COVID-19) முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்கண்ட பணி மேற்கொள்ள பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)ன்கீழ் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | விருத்தாசலம் நகராட்சிக்கு NLC நிறுவனத்தால் CSR நிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள BHELL MISTER கிருமி நாசினி தெளிக்கும் இயந்திரத்தை பொது சுகாதாரபிரிவு லாரியில் 15 கேவி ஜென்செட் மற்றும் 2000 லிட்டர் பிவிசி சிண்டெக்ஸ் டேங்குடன் பொருத்தி அமைக்கும் பணி. | திரு. கே. சிவகுருநாதன், ஒப்பந்ததாரர். விருத்தாசலம். | 299500/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 20.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6 ல் உள்ள ஜங்ஷன் ரோட்டில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் அன்னியர் யாரும் பிரவேசிக்காமல் இருக்கவும், கால்நடைகள் உள்ளே செல்லாமல் இருக்கவும் வளாகத்தை சுற்றி கம்பி வேலி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1,70,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண். 21.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 வயலூர் காலணியில் புதியதாக சிமெண்ட் சாலையுடன் கூடிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்துத்தர கோரி பொது மக்கள் கோரிக்கை அளித்ததற்கிணங்க, மேற்படி பகுதியில் சிமெண்ட் சாலை, மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 4,30,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 993/2020/இ1)